Registerde as a Newspaper  பக்கங்கள் 04  விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  மக்கள் தினசரி  Peoples Daily

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  ஐப்பசி 16  (01 - 11 - 1993)  திங்கட்கிழமை  ஓசை 255

பொது நூலகம்
மாநகராட்சி மன்றம்
-1-11-1993

## ஆர்ப்பாட்டங்களை கலைக்க நீர்ப்பீரங்கி அரசு கொள்வனவு

தென்னிலங்கையில் சிறிலங்கா அரசிற்கு எதிராக நடக்கும் கலவரங்களை அடக்க பல லட்சம் ரூபா செலவில் நீர்ப்பீரங்கிகளை அரசு கொள்வனவு செய்துள்ளது. சிறிலங்காவில் ஆளும் கட்சிக்கு எதிராக தென்னிலங்கையில் பரவலாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்போது அதனை முறியடிக்கவே இந் நீர்ப்பீரங்கி கொள்வனவு செய்யப்பட்டு பொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோருக்கு நீரைப் பீசிறியடித்துக் கலைப்பதற்கென ரூபா பத்துலட்சம் செலவில் நீர்ப்பீரங்கியுடன் கூடிய வாகனமொன்றையே அரசு இறக்குமதி செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

# ஆரையம்பதிகிராமத்தில்மட்டும் 350 தமிழர்கள் படுகொலை

## ராணுவம், ரெலோ கூட்டு நடவடிக்கை

(கொழும்பு)

**இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிய பின்னர் ஆரையம்பதியில் மட்டும் 350 அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இப்படுகொலைகளுக்கு சிறிலங்கா இராணுவமும், அவர்களுடன் இணைந்துசெயற்படும தமிழ்க் குழுக்களுமே காரணமாகும. இவ்வாறு கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றிற்கு ஆரையமபதிவாசி ஒருவர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.**

மேற்குறிப்பிட்ட வாரப் பத்திரிகை சில வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் படையினரும் அவர்களோடு இணைந்து செயற்படும் ரெலோ கும்பலும் புரியும் கொடுமைகள் குறித்து இரண்டுபக்க கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. இக் கட்டுரையில் கூறப்பட்டவற்றை மறுத்து இக்குழுவைச் சேர்ந்த எம். பியான கருணாகரன் மறுப்பு ஒன்றை இப் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தார்.

இவரின் மறுப்பு அறிக்கை முழுப்பொய் என்றும் கட்டுரையில் வெளியானவை உண்மைச் சம்பவங்களே என்றும் விபரித்து எழுதப்பட்ட கடிதமே இதுவாகும்.

அக் கடிதத்தின் விபரம் வருமாறு; எமது ஊரில் மட்டும (ஆரையம்பதி) சுமார் 350பேர் இவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். இது பற்... கள் நேரில் வந்தால் வீடு வீடாக அழைதது்ச் சென்று உறுதிப்படுத்துவோம். ரெலோவை சேர்ந்த ஒருவர் மண்முனையில் இராணுவத்துடன் ஜீப்பில் சென்றுகொண்டிருந்தபோது கண்ணிவெடியில கொல்லப்பட்டதற்காக ஆரையம்பதியை சுற்றியிருந்த 47 அப்பாவி இளைஞர்கள் ஆரையம்பதி முகாம் அருகே உள்ள சவக்காலையில் ரயர் போட்டு உயிருடன் எரிக்கப்பட்டனர். ரெலோ கும்பலை சேர்ந்த ராம், ராமன், அச்சுதன், வெள்ளை, அன்பன் ஆகியோரே இராணுவத்துடன் சேர்ந்து இக் கொடூரத்தை புரிந்தனர். இது நடந்தபோது கருணாகரன் எம். பி. மட்டக்களப்பில்தான் நின்றார். ஆரையம்பதி அதிரடிப்படை முகாமில் இப்போதும் ரெலோ குழுவினா இருக்கின்றனர். இவர்களில் அன்பன் என்பவர் அதிரடிப்படையுடன் வீடுகளுக்குச் சென்று இளைஞர்களையும், யுவதிகளையும் பிடித்து வருவார். அச்சுதன் இவர்களுடன் பேரம்பேசி பணம் பெற்று விடுதலை செய்வார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்குக

### ஆயர் இராயப்பு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் கடலில் மன்னார் மீனவர்கள் மீன்பிடிக்க தடைவிதிக்கப்பட்டுள்ள அதே சமயம் இந்திய மீனவர்கள் இப் பகுதியில் நுழைந்து மீன் பிடிப்பதாக மனனார் ஆயர் முறையிட்டுள்ளார் மன்னார் மீனவர்களுக்கு இப்பகுதியில் தொழில் செய்ய அனுமதி வழங்குமாறு ஆயர் இராயப்பு ஜோசப் கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவிடமும் மற்றும் அதிகாரிகளிடமும் நேரடியாக சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

பேசாலைப் பகுதியிலுள்ள இழுவைப் படகு மீனவர்கள் கடல் பாதுகாப்பு வலயத்தால் தொழிலிழந்து கஷ்டப்படுவதை மன்னார் ஆயர் இச் சந்திப்பின்போது எடுத்து விளக்கினார் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது இம் மீனவர்கள் தொழில் செய்ய அனுமதிக்குமாறும் ஆயர் எடுத்துக் கூறினார்.

## பல்கலை. அனுமதி; பிரட்மனுடன் பேச்சு

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளித திட்டத்தினால் வடபகுதி மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து கொழும்பில் பல தரப்புடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன.

பல்கலைக் கழகங்களுக்கான புதிய கல்வி ஆண்டுக்கென பல்... ளுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனுக்கும் ''குவேக்கர்ஸ்'' சர்வதேச சமாதானக்குழுவுக்கும் இடையில் நேற்றுமுனதினம் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. இப்பேச்சுவார்த்தையின் போது குவேக்கர்ஸ் குழுவின் பிரதிநிதிகள் சில புள்ளி விப...

## நாளை படகுச்சேவை

## அநுரா ஆதரவாளர்கள் கட்சியிலிருந்து விலகுவராம்

(கொழும்பு)

நான் கட்சியிலிருந்து விலகியது போல் சுதந்திரக் கட்சியிலிருந்து எனது ஆதரவாளர்களான சில எம். பிகள் விலக முன்வந்துள்ளனர் என அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார் எனினும் தாம் இப்போது அவர்களை கட்சியிலிருந்து விலக வேண்டாம் எனக் கூறிபதாகவும் உரிய நேரத்தில் அவர்கள் விலகுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

ஐ தே கவில் தமக்கு என்ன பதவி வழங்கப்படும் என்பது தமக்கு தெரியாது என்றும் அநுரா கூறியுள்ளார்.

### தாண்டிக்குளம் தடுப்பு முகாமில்

## கைதானவர்கள் மீது வழக்கு தொடர்வதில் சிக்கல்

(வவுனியா)

வடக்கிற்குள் தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு செல்ல முயற்சித்த 80பேர் இதுவரை கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கபபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியாவில் உள்ள மேல் நீதிமன்றம் இயங்காத காரணததால் இவர்கள் மீதுவழக்கு தொடரமுடியாதிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் சிலர் மீது

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பொருள்கள் இறக்கிய பின்பே 'வாதுவ' திருமலை செல்லும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'வாதுவ'' கப்பல் பொருள்கள் அனைத்தையும் இறககிய பினனரே திருகோணமலை செல்லவுள்ளதாக யாழ். அரச அதிபர் கா மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இக் கப்பல் இடையில் அரச ஊழியர்களை ஏற்றிக் கொண்டு திருக்கோணமலை செல்ல ஏற்பாகி இருந்ததாகவும் பின்னர் பொருள்கள் முழுவதையும் இறக்கி முடித்தே திருகோணமலைக்கு அரச ஊழியர்களை ஏற்றிக் கொண்டு செல்லும என தெரிவிக்கப்பட்டது

## யுத்த செய்தி தணிக்கைக்கு சிறிலங்கா அரசு மறுப்பு

### படையினர் கோரிக்கை நிராகரிப்பு

இராணுவ நடவடிக்கைகள் குறித்த செய்திகளை கொழும்பு பத்திரிகைகள் வெளியிட... தியரட்ன முன்னதாக அரசிடம் கோரிககை விடுத்திருந்தார்... டிக்கை தோல்வி தொடர்பாக தெனனிலங்கை பத்திரிகைகள்...

...வர்களுக்கு இப்பகுதியில் தொழில் செய்ய அனுமதி வழங்குமாறு ஆயர் இராயப்பு ஜோசப் கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவிடமும் மற்றும் ...இச் சந்திப்பின்போது எடுத்து விளக்கினார் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலாவது இம் மீனவர்கள் தொழில் செய்ய அனுமதிக்குமாறும் ஆயர் எடுத்துக் கூறினார்.

முன்னர் மட்டக்களப்பில் படையினரும் அவர்களோடு இணைந்து செயற்படும் ரெலோ கும்பலும் புரியும் கொடுமைகள் குறித்து இரண்டுபக்க கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. இக் கட்டுரையில் கூறப்பட்டவற்றை மறுத்து இக்குழுவைச் சேர்ந்த எம். பி யான கருணாகரன் மறுப்பு ஒன்றை இப் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தார்.

இவரின் மறுப்பு அறிக்கை முழுப்பொய் என்றும் கட்டுரையில் வெளியானவை உண்மைச் சம்பவங்களே என்றும் விபரித்து எழுதப்பட்ட கடிதமே இதுவாகும்.

அக் கடிதத்தின் விபரம் வருமாறு; எமது ஊரில் மட்டும (ஆரையம்பதி, சுமார் 350பேர் இவர்களால் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கின்றனர். இது பற்றிய முழுத்தகவலையும் நீங் ...உறுதிப்படுத்துவீர்கள். ரெலோவை சேர்ந்த ஒருவர் மண்முனையில் இராணுவத்துடன் ஜீப்பில் சென்றுகொண்டிருந்தபோது கண்ணிவெடியில கொல்லப்பட்ட தற்காக ஆரையம்பதியை சுற்றியிருந்த 47 அப்பாவி இளைஞர்கள் ஆரையம்பதி முகாம் அருகே உள்ள சவக்காலையில் ரயர் போட்டு உயிருடன் எரிக்கப் பட்டனர். ரெலோ கும்பலை சேர்ந்த ராம், ராமன், அச்சுதன், வெள்ளை, அன்பன் ஆகியோரே இராணுவத்துடன் சேர்ந்து இக் கொடூரத்தை புரிந்தனர். இது நடந்தபோது கருணாகரன் எம். பி. மட்டக் ...குழுவினராக இருக்கின்றனர். இவர்களில் அன்பன் என்பவர் அதிரடிப்படையுடன் வீடுகளுக்குச் சென்று இளைஞர்களையும், யுவதிகளையும் பிடித்து வருவார். அச்சுதன் இவர்களுடன் பேரம்பேசி பணம் பெற்று விடுதலை செய்வார்.

( 4ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'வாதுவ'' கப்பல் பொருள்கள் அனைத்தையும் இறக்கிய பின்னரே திருகோணமலை செல்லவுள்ளதாக யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

...ஊழியர்களை ஏற்றிக் கொண்டு திருக்கோணமலை செல்ல ஏற்பாகி இருந்ததாகவும் பின்னர் பொருள்கள் முழுவதையும் இறக்கி முடித்தே திருகோணமலைக்கு அரச ஊழியர்களை ஏற்றிக் கொண்டு செல்லும என தெரிவிக்கப்பட்டது

# பல்கலை. அனுமதி; பிரட்மனுடன் பேச்சு

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளித திட்டத்தினால் வடபகுதி மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து கொழும்பில் பல தரப்புடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன.

பல்கலைக் கழகங்களுக்கான புதிய கல்வி ஆண்டுகென பல்கலைச்கழக மானியங்கள் ஆணைகுழுவினால் வெளியிடப்பட்ட வெட்டுப் புள்ளித் திட்டத்தினால் வடபகுதி மாணவர்களுக்கான அனுமதி பல மடங்குகளால் குறைந்துள்ளது இதனால் ...க கணககான மாணவர் தமது உயர் கல்வியை இழக்கும நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு வடபகுதி மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப் பு குறித்தும் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பாதிப் பு குறித்தும் ஜனாதிபதி சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனுக்கும் ''குவேக்கர்ஸ்'' சர்வதேச சமாதானக்குழுவுக்கும் இடையில் நேற்றுமுனதினம் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. இப்பேச்சுவார்த்தையின் போது குவேக்கர்ஸ் குழுவின் பிரதிநிதிகள் சில புள்ளி விப

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்று பகுதியில் எறிகணைத் தாக்குதல்

### ஒருவர் காயம்

மணலாற்றுப்பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து கடந்த வெள்ளியன்று செம்மலை குமுழமுனைப் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலால் ஒருவர் காயமடைந்தார்.

இவ் எறிகணைகளில் இரண்டு செமமலைப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன. குமுழமுனைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையினால் 5ஆம் வட்டாரம் குமுழமுனையைச் சேர்ந்த து. கிருஷ்ணகுமார் (வயது 32) என்பவரே காயமடைந்தவராவார்.

### தச்சனாமருதமடு பகுதி அகதிகள்

# நிவாரணம் வழங்குமாறு பெரும் ஆர்ப்பாட்டம்

(...மது நிருபர்)

...மாவட்டத்தில் அரச மற்றும் அரச ...நிறுவனங்கள் ...யும் காலவரைய ...முடியமக்கள்தமக்கு ...வு நிவாரணம் ...மாறு கோரி பெரும் ...டங்களை நடாததி ...னர்.

...த சில மாதங்களுக்கு ...மடு மற்றும் தச்சனா ...பகுதி அகதி முகாம் களில் தங்கியிருந்த ஆயிரக் கணக்கான வவுனியா தமிழ் அகதிகளை மீண்டும்இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசத்திற்குள் வந்து குடியேறுமாறு கோரி அரசு உலர் உணவு நிவாரணததை இடை நிறுத்தியது இதனைக்கண்டித்த முகாம்மக்கள் பாதுகாப்பு உறுதிப்படுத் தப்படாத நிலையில் அங்கு சென்று குடியேற முடியாது எனவும் தமக்கான உலர் உணவு நிவாரணத்தை தொட ர்ந்து வழங்குமாறு கோரி பல தடவைகள் ஆர்ப்பாட்ட ஊர் வலங்களை நடாத்தியதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர்களையும் அனுப்பி வைத்தது தெரிந்ததே.

இவ்வாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இது வரை இந் நிவாரணம் வழங்கப்படாததை கண்டித்து மடு, தச்சனா மருதமடு மக்கள் நேற்று முன்தினம் மீண்டும் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் முன்பாக மறியல்போராட்டம் செய்ததுடன் ஆர்ப்பாட்ட பேரணியையும் நடாத்தினர்.

இப் பேரணியில் கலந்து கொண்ட 2500ற்கு மேற்பட்ட மக்கள் மடு, தச்சனா மருதமடு பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் இயங்கும் பொது ஸ்தாபனங்கள், அரச திணைக் களங்கள் மற்றும் கடைகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அதிகாரி ஒருவர் ஆலயத்தில் தஞ்சம்

(லண்டன்)

...அகதிமுகாம் சிறிலங்கா ...நிவாரண உணவு ...டை ஆட்சேபித்து அகதி ...டத்திய ஆர்ப்பாட்டத் ...ால் இப்பகுதி யூ.என்.எச். சீ.ஆர். அதிகாரி ஒருவர் அருகிலுள்ள ரோமன் கத்தோலிக்க ஆலயத்தினுள் தஞ்சமடைய வேண்டிய நிலை ஏற்பட்டதாக பி பி.ஸி தெரிவித்தது.

## நாளை படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை நாளையும் எதிர் வரும் 4-ம், 6-ம திகதிகளிலும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும் முன்னர் அறிவிக்கப் பட்டதுபோன்று இன்று நடைபெறமாட்டாது எனவும் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வீரச்சாவு



வீரவேங்கை
சகாந்தன்

மட்டக்களப்பில் கோவில் போரதீவு முனைத்தீவு என்ற இடத்தில் கடந்த27 ம் திகதி இரவு 7 30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர்வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை சகாந்தன் ( செல்வநாயகம் மாசிலாமணி, பாடசாலை வீதி கோவில் போரதீவு, பெரியபோரதீவு ) எனும்போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# யுத்த செய்தி தணிக்கைக்கு சிறிலங்கா அரசு மறுப்பு

### படையினர் கோரிக்கை நிராகரிப்பு

இராணுவ நடவடிக்கைகள் குறித்த செய்திகளைகொழும்பு பத்திரிகைகள் வெளியிட அரசு அனுமதி வழங்கியுள்ளது இத்தகைய செய்திகளை தணிக்கை செய்ய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அதிகாரம் தருமாறு இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்ன முன்னதாக அரசிடம் கோரிககை விடுத்திருந்தார்.

எனினும் இக்கோரிக்கையை அரசு நிராகரித்துவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன கிளாலி மீதான ஒப்பரேஷன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தோல்வி தொடர்பாக தென்னிலங்கை பத்திரிகைகள் இராணுவத்தை கடுமையாக விமர்சித்தமையும் இதனால் இராணுவத்தளபதி இப்பத்திரிகைகள் மீது கடும் கண்டனம் வெளியிட்டமையும் தெரிந்ததே.

# புலிகள் மட்டுமே பாதுகாப்பு; மக்களின் எண்ணம் அதுவே

### 'ராவய' செய்தியாளர் தெரிவிப்பு

''சிறிலங்கா இராணுவத்தினர் யாழ்ப்பாணததைக கைப் பற்றினால் அங்கு இரத்த ஆறு ஓடும் என அங்குளள மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அங்குள்ள சகல மக்களும் கொல்லப்படுவார்கள் எனவும் அதனால் விடுதலைப் புலிகளால் மட்டுமே தம்மை பாதுகாக்க முடியும் எனவும் அங்குள்ள மக்கள் எண்ணுகிறார்கள்'' இவ்வாறு 'ராவய' செய்தியாளர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ''நாம் யுத்தம் நடைபெற்ற கிளாலிப் பகுதிக்கு மிகுந்த பத்துடனேயே சென்றோம் ஏனெனில் இராணுவத்தினர் அங்கிருந்து பின்வாங்கிச் செல்லும்போது பெருமளவு மிதி வெடிகளையும் கண்ணி வெடிகளையும் புதைத்துவிட்டுச் சென்றிருந்தனர்.

நாம் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுடன் சென்று அழிக்கப்பட்ட இரண்டு யுத்த டாங்கிகளையும் இராணுவ வண்டி; வாகனங்களையும் பார்வையிட்டோம். இராணுவத்தினரின் உடல் பாகங்களும், அப் குதியில் சிதறிக் காணப்பட்டன. தற்காலிக பாதுகாப்பு அரண்கள் அமைத்த தடயங்கள் காணப்பட்டன

அந்த காணப்பட்ட சிறிய வீடுகள் அனைத்திறகும் இரா

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# இலங்கையர் உட்பட 62 பேர் ஜேர்மன் பொலிசாரால் கைது

### சட்டவிரோதமாக நுழைந்தனராம்

(லண்டன்)

ஜேர்மனியில் சட்டவிரோதமாக உள்ளே நுழைந்த இலங்கையர்கள் உட்பட 62பேரை ஜேர்மனிய பொலிசார் கைது செய்துள்ளனர். வீதியில் பயணம் செய்து கொண்டிருந்த போதே இவர்கள் கைதாகினர். பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானியர்களும் இதில் அடங்குவர்.

ரஷ்யா, செக்கோஸ்லவேக்கிய வழியாக ஆசிய மக்கள் சட்டவிரோதமாக ஜேர்மனிக்குள் கொண்டுவரப்படுவதாக ஜேர்மனிய செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை ஜேர்மனியில் தஞ்சம் கோருபவர்களுக்கு இனிமேல் உணவு, உடை மற்றும் வீட்டுத் தளபாடங்கள் மாத்திர வழங்கப்படும்.

( 4 ஆம பக்கம் பார்க்க )

எதிரிக்கு
குடாநாட்டைப் பிடிப்பது குறிக்கோள்
**இளைஞனே!**
உன் எதிர்கால இலக்கு என்ன?
வாடா தம்பி களததுக்கு
வரலாறு உனக்கும் இருக்கட்டும்

## வரி விளம்பரம்

### ஆனந்தம் சீயாக்காய் பவுடர்

சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் கேட்டு வாங்குங்கள். தயாரிப்பாளர்கள்: ஸ்ரீ சச்சிதானந்தா என்டர் பிறைஸ் ஸ்ரீசச்சிதானந்தா ஆசிரம அருகாமை கைதடி. (6420)

### "கொழும்பில் கல்யாணம்"

இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'கொழும்பில் கல்யாணம்' நாடகத்தை எழுதித்தயாரித்த அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நூல்கள்:
1. கெட்டிக் காரர்கள்
2. முதலாம் பிள்ளை 30/-
(6439)

### தமிழர் கலைகள் ஆய்வரங்கு

குரும்பசிட்டி சன் மார்க்க சபையினர் நடத்தும் மணி விழா நிகழ்ச்சித் தொடரின் இரண்டாவது அங்கமாக தமிழர் கலைகளில் நுண்கலைகள் பற்றிய சிறப்பு ஆய்வரங்கு நடத்தப்படவுள்ளது. எதிர் வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப் பீட மண்டபத்தில் நடைபெறும் இந்த ஆய்வரங்கை விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை. இரத்தினதுரை தொடக்கி வைக்கவுள்ளார். திரு. ஆ. மகாதேவன், திரு. செ. கிருஷ்ண ராஜா, திரு. ஆ. தம்பித்துரை திருமதி. ப. உமாசங்கர், திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

### வருடாந்த பரிசளிப்பு

யாழ்/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் நாள் வைபவம் நாளை செவ்வாய்க் கிழமை பி. ப 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திரு. எஸ் திருநாவுக்கரசு அவர்களின் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்ச்சியில் முதன்மை

## வளநிலையத் திறப்பு விழாவும் கண்காட்சியும்

வடமராட்சிக் கோட்டத்தின் பிற்போடப்பட்ட மனைப்பொருளியல் வள நிலையத் திறப்பு விழாவும் கண்காட்சியும் 1.11.93, 2.11.93 ஆகிய திகதிகளில் யா/வதிரி திரு இருதயக் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.


நன்றி.

யோ. கந்தசாமி
சே.ப.ஆ. ஆசிரியர்
மனைப்பொருளியல்

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
30- 10- 93

(சி-7812)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு.
### சுப்பையாமுதலி தங்கவேல்முதலி
(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்)

பிறப்பு 01-04-1934
இறப்பு 12-11-1992

உணவை மறப்போம் உறக்கத்தை மறப்போம்
உமை மறப்போமா உமதன்பை மறப்போமா
கனவாய்ப் போன உம் கதையை மறப்போமா
நினைவின் நிழலில் வாழ்கின்றோம். சாந்தி!

– குடும்பத்தினர்.

'முகுந்தம்'
137, செம்மணி வீதி,
நல்லூர்.

(சி-7814)

## 45-ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### மேஜர் மூர்த்தி மாஸ்ரர்
கடற்புலிகளின் பொறியியல் பிரிவுப் பொறுப்பாளர்

தாயின் மடியில்: 20-11-51
தாயக மண்ணில்: 18-09-93

உன்முகம் காணாது உன்தாய் கதறுகிறாள்
உன்குரல் கேட்காது உன் தந்தை வாடுகின்றார்
உன் அழைப்பு கேட்காமல் உன் சகோதரர்கள்
தேம்பி அழுகின்றனர்
உன் வரவைக்காத்து ஏங்குகின்றார் உன் மருமக்கள்
உன்துணை இல்லாது ஏங்குகின்றார் உன் மைத்துனர்
உன் இயக்கம் இல்லாது ஏங்குகின்றார் உன் நண்பர்
உன் வரவை காத்து உறவினர் ஏங்குகின்றார்.

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக

எமது குலவிளக்கின் வித்துடலை எமக்கு கொண்டு வந்து தந்த அமைப்பினருக்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்டும், கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

01-11-93 திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்

குருநாதர் கோவில் வீதி,
பொலிகண்டி.
(6434)

## 3-ம் ஆண்டுநினைவலைகள்



### மேஜர் சங்கர்
(அரியரத்தினம் லவலோகிதன்)

பிறப்பு: 08-08-1968
வீரச்சாவு: 01-11-1990

நண்பா!
நீ நடந்த தேசமது ீ விழந்து நிற்கிறது எங்கள் -
நில மடந்தை வாழ் விழந்து வ ர்த்தையின்றி
அழுகி து
சோகம் தின்ற சோகத்துடன் தொடர்கிறது
எம்பயணம்
தேசம் எங்குந் தமிழ் ஈ த்தாகத்தால் தவிக்கிறது
- நண்பர்கள்

[6436]

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



### தம்பையா இலட்சுமிப்பிள்ளை
திதி: 1- 11- 93

## வீர நினைவாகி எம் நெஞ்சமதில்

பொறுப்பாளர் புதுவை.இரத் தினதுரை தொடக்கி வைக்க வுள்ளார். திரு. ஆ. மகாதே வன், திரு. செ. கிருஷ்ண ராஜா, திரு. ஆ. தம்பித்துரை திருமதி. ப. உமாசங்கர், திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

### வருடாந்த பரிசளிப்பு

யாழ்/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் நாள் வைபவம் நாளை செவ்வாய்க் கிழமை பி. ப 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திரு. எஸ் திருநாவுக்கரசு அவர்களின் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேசச் செயலதிபர். திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி. புஸ்பா கணேசலிங்கம் அவர்களும் கௌரவவிருந்தினராக தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். பரிசில்களை முதன்மை விருந்தினர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள் வழங்கவுள்ளார். (86)

---

### ஓர் ஆண்டு

### நினைவு அஞ்சலி



**திரு. மயில்வாகனம் சதயகுமார் (ராசா)**

தோற்றம் :- 30-10-1960

மறைவு :- 11-11-1992

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்

71, கண்ணபுரம்,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (6443)

---

திரு.

## சுப்பையாமுதலி தங்கவேல்முதலி

(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01-04-1934 | 12-11-1992 |

உணவை மறப்போம் உறக்கத்தை மறப்போம்
உமை மறப்போமா உமதன்பை மறப்போமா
கனவாய்ப் போன உம் கதையை மறப்போமா
நினைவின் நிழலில் வாழ்கின்றோம். சாந்தி!

– குடும்பத்தினர்.

'முகுந்தம்'
137, செம்மணி வீதி,
நல்லூர். (சி-7814)

---

எமது குலவிளக்கின் வித்துடலை எமக்கு கொண்டு வந்து தந்த அமைப்பினருக்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்டும், கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


01-11-93 திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


– குடும்பத்தினர்

குருநாதர் கோவில் வீதி,
பொலிகண்டி. (6434)

---

## வீர நினைவாகி எம் நெஞ்சமதில்





**2-ம் லெப். மதுவன்**
**தவராஜசிங்கம் விஜயசேகரன்**

**கப்டன் காண்ஸ்**
**தவராஜசிங்கம் குலசேகரன்**

| 2-ம் லெப். மதுவன் | | கப்டன் காண்ஸ் |
|---|---|---|
| 1972-02-24 | தோற்றம் | 1973-11-15 |
| 1990-11-01 | வீரச்சாவு | 1993-04-19 |

எங்களின் இனத்தைக் காக்க அண்ணனின் வழியில் நின்று
எதிரியை விரட்டும் பணியில் மணலாறு மண்ணதனில்
மாவீரனாகி நீயும் மூன்றாண்டு ஆனதப்பா மதுவா
தம்பி காண்சனும் கூடவந்து ஓராண்டு நிறையவில்லை
எண்ணும் போதெல்லாம் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில்
வையம் உள்ளளவும் நீங்கள் வாழ்ந்திடுவீர்
உங்கள் பாதங்களுக்கு எங்கள் அஞ்சலிகள்

சாவகச்சேரி (6447) – குடும்பத்தினர்

---



## தம்பையா இலட்சுமிபிள்ளை

**திதி: 1- 11- 93**

குளமங்காலை பிறப்பிடமாகக் கொண்டவரும் வீமன்காமம் தெல்லிப்பழையை வசிப்பிடமாக கொண்டவருமாகிய தம்பையா இலட்சுமிப்பிள்ளையின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.
மக்கள் ,மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சுகிபவனம்,
உரும்பராய் வடக்கு. (6401)

---

## நினைவு கூருகின்றோம்..

**1993- 11- 01**

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் முழங்காவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

★ **வினோத்** (ஆ. அல்போன்ஸ் ஜெயானந்தம் - நாவாந்துறை - யாழ்.)

முழங்காவில் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 10க்கு மேற்பட்ட பொதுமக்கள்.

1990ஆம் ஆண்டு மணலாறு - முந்திரிகைக்குளம் சிறிலங்கா இராணுவ மினிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவெய்திய -

**மேஜர் சங்கர்** (அரியரட்ணம் லவலோகிதன் தம்பலகமம்- திருமலை)

**முசோலினி** (ஆபிரகாம் தயாளசீலன் - 7-ம் வட்டாரம், கட்டைப்பறிச்சான் - திருமலை)

**2-ம்லெப். மதுவன்** (தவராஜசிங்கம் விஜயசேகரன் - மீசாலை தெற்கு - சாவகச்சேரி)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு வடமராட்சி புறாப்பொறுக்கி வல்வைச் சந்தியில் சிறிலங்கா விமானப் படையினரின் குண்டுவீச்சில் பலியான பொதுமகன்.

மட்டு ஏறாவூர்ப் பகுதியில் தமிழ்த் தொழிலாளர் மீது முஸ்லிம் காடையர்கள் மேற்கொண்ட கொடூரத் தாக்குதலில் பலியான தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

[சி-7813]

சிந்தனைக்கு

இன்றியமையாத தேவையின் வலிமையை
எதிர்த்து நிற்க எவராலும் முடியாது

– ஈஸ்கிலஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## சூழலை பாதுகாப்போம்

அணுஆயுதங்களினால் பூமியில் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலை தவிர்த்துக் கொள்ள முடியும் ஆயினும். சூழல் மாசடைவதால் ஏற்படும் அச்சுறுத்தலை தவிர்க்க முடியுமா? என்ற கேள்வி இன்று உலகை உலுப்பத் தொடங்கியுள்ளது. கடந்த நூற்றம்பது வருட காலத்தில் உக்கிரமாக இருந்த எட்டு கோடை காலத்தில் ஆறு கோடைகாலங்கள் எண்பதுகளில் மட்டும் ஏற்பட்டுள்ளமை சூழல் எவ்வளவு விரைவில் மாசடைந்து செல்கின்றது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சூழல் விரைவாக மாசடைந்து செல்கின்றது என்பதற்கு இயற்கைச் சமநிலை பாதிப்படைந்து செல்கின்றது என்பதே பொருளாகும். அதாவது, மனிதனின் நடவடிக்கைகள் நிலம், நீர், வளி ஆகியவற்றில் ஏற்படும் மாற்றம் இயற்கைச் சூழலை பெரிதும் பாதிப்படையச் செய்கின்றன. பிரதானமாக இயற்கைச் சமநிலையானது நிலப் பகுதியில் காடுகள் அழித்தல் மூலமும், வளிமண்டலத்தில் நச்சு வாயுக்கள்சேர்க்கையாலும், நீரில் கழிவுப் பொருள்கள் கலப்பதினாலும் ஏற்படுகின்றன. இவ்வாறான பாதிப்புக்களை உலகில், ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி விரைவுபடுத்தியது. அதிலும், கடந்த முப்பது வருட காலத்திற்குள் மனிதன் பூமியை பேரழிவின் விளிம்பிற்கே கொண்டு சென்றுவிட்டான் என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந் நிலையில், பூமியில் மனிதன் தொடர்ந்தும் உயிர் வாழ வேண்டுமானால் பூமியின் இயற்கைச் சமநிலையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். உலக அழிவிற்கான போராயுதங்களைச் செய்து குவித்ததில் மேற்குலகிற்கு உள்ள பங்கைப் போன்றே சூழல் மாசடைவதற்கான பெரும் பங்கும் அவர்களுக்கே உரியதாகும். ஆனால், 'எமது பங்கிற்கு நாமும் இயற்கைச் சமநிலையைப் பாதிப்படையச் செய்யாமல் இல்லை. இதில் முக்கியமாக காடழிப்பு எமது இயற்கைச் சமநிலையைப் பெரிதும பாதிப்படையச் செய்கின்றது.

யாழ். குடாநாடு ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்தளவு மழைவீழ்ச்சியோ அன்றி பெரும் காட்டு வளமோ கொண்ட பகுதி அல்ல. பொதுவாக நீண்ட வரண்ட கோடையைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு சுமார் மூன்று மாத காலங்களில் 50 அங்குலத்திற்கும்

# அழிவுறும் நம் காட்டுவளம் அதனைத்தடுக்க வழி காண்போம்!

தமிழீழம் இன்று பல்வேறு வகையாலும் நெருக்குதலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றது. ஒருபுறம் இராணுவ நெருக்குதல்களையும் மறுபுறம் பொருளாதார நெருக்குதல்களையும் கொடுப்பதன் மூலம் எமது நிலப்பரப்பை முற்றாகவே ஆக்கிரமிக்க எதிரி திட்டமிட்டு வருகின்றான். இத்தனைக்கும் முகம் கொடுத்து வீறு கொண்டு நிற்கும் நாம் எதிரியினை எம் எல்லையிலிருந்து விரட்டும் காலம் வெகு தூரத்தில் இல்லை. எத்தனையோ உயிரிழப்புகள், உடைமை இழப்புகள் என பல்வேறு இழப்புக்களின் மத்தியில் நாம் மீட்டெடுக்கும் எமது தேசம் மரங்களற்ற ஒரு வனாந்திரமாகவா மீட்டெடுக்கப்படல் வேண்டும். எமது சூழலைக் காத்து நிற்கும் மரங்களை நாமே அழிப்பதன் மூலம் எமது மண்ணைப் பாழ்படுத்த நினைக்கும் எதிரியின் கரத்தை நாம் பலப்படுத்துவதா? மண் மீட்கப் போராடும் நாம் எம் மண்ணை வளமான மண்ணாக மீட்கப்பாடுபட வேண்டாமா? எனவே திட்டமிட்டு மரங்களை நடுவதன் மூலம் எமது தேசத்தை பச்சைப்பசும் சோலையாக்குவோம்! தேவைகள் தவிர்க்க முடியாதவைதான். அதனால் மரங்கள் வெட்டப்படுவதும் தவிர்க்க இயலாதவையே. அதற்காக கண்டபடி பச்சை மரங்களை வெட்டுவதையாவது தடுக்க வேண்டும்.

தென்தமிழீழத்தில் வருடாந்தம் 40,000 கெக்டேயர் காடுகள் திட்டமிட்டு அழிக்கப்படுவதனை அண்மைய தரவுகள் தெரிவிக்கின்றன. இதே வேளை யாழ் குடாநாட்டிற்கும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான தரைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டதால் விறகுக்காகவும், ஏனைய தேவைகளுக்காகவும் குடாநாட்டுக்குள்ளேயே மரங்களை வெட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்நிலை இவ்வாறே தொடருமானால் தென்தமிழீழமும், யாழ்குடாவும் விரைவில் மரங்களற்ற வனாந்தரமாக மாறிவிடுமோ என அஞ்ச வேண்டியுள்ளது. இந்நிலையில் எம்மால் பாதுகாக்கக் கூடிய நிலையில் இருக்கும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருக்கும் பெறுமதிமிக்க மரங்களையேனும் காப்பது எங்கள் தலையாய கடமையாகும்.

யாழ் குடாநாட்டில் மக்கள் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தங்கள் வளவுகளில் இருக்கும் மரக்கழிவுகளில் எதையுமே மிச்சம் வைப்பதில்லை. பனை மரத்தில் ஊமல் தொடக்கம் புகையிலைக் காம்பு வரை அதனைப் பயன்படுத்தியே தீர வேண்டிய க்கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டு தாங்கொணாத் துயரத்துடன் அவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். அதே வேளையில் தமிழீழத்தின் இன்னொரு பகுதியான பெரு நிலப்பரப்பில் மரங்கள் அளவுக்கு அதிகமாக இருப்பதாக எண்ணிக் கொண்டு மக்கள் புதிய புதிய மரங்களையே தினம் தறிக்கும் நிலையிலும் எரிக்கும்போது அதிக சக்தியைத் தருகின்றது என்பதற்காக குறிப்பிட்ட சில மர வீறகுகளை மட்டுமே பாவிக்கும் மனநிலையிலும் மரங்களை அழித்து வருவது எந்த விதத்தில் பொருந்தும்?

அத்துடன் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்க அதை விடுத்து சேனைப் பயிர்ச்செய்கை என்ற பேரில் எத்தனை வளமான காட்டை அழித்து எரிக்கின்றோம். சவூதியரேபியாவில் ஒரு வேப்பமரம் வளர்த்தெடுப்பதற்காக 1 இலட்சம் ரூபா செலவழித்து 50,000 வேப்ப மரங்களை வளர்த்துள்ளதாக அந்த நாட்டின் செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இங்கே பெறுமதி மிக்க எமது வன வளத்தை அழிப்பதிலேயே நாம் ஆர்வம் கொண்டு நிற்கின்றோம்.

''வனம் ஒரு நாட்டின் தனம்'' என்று கூறுவார்கள். தனத்தைச் சேகரிக்க ஆர்வம் கொள்ளும் நாம் வனம் என்ற தனத்தை எங்கள் வருங்காலச் செல்வங்களுக்காகவேனும் சேகரிக்க வேண்டும்.

ஆடம்பரத்திற்காக தளபாடங்கள் செய்வதையும் தவிர்த்து ஏற்கனவே இருக்கும் தளபாடங்களை புனரமைத்துப் பயன்படுத்த நாம் முனைய வேண்டும். விவசாயச் செய்கையின்போது கம்பு ஊன்றுதல், இடிகட்டை நடுதல் என்ற நடவடிக்கையின் நிமித்தம் வெட்டியழிக்கும் வளரும் சிறிய மரங்கள்தான் எத்தனை. இவற்றை தறிப்பதையும் நாம் மனம் வைத்து தவிர்ப்போம். தேவையின் அளவிற்கு வெட்டும்போது விரைவில் வளரக் கூடிய மரங்களைத் தெரிந்து வெட்டுவோம். இடிகட்டைக்காக நடும் மரங்களைக் கூட மீண்டும் தளிர் விட்டு வளரக் கூடிய சீமைக்கிழுவை, பூவரசு முள்முருங்கை போன்ற மரங்களை நடுவோம். இதேவேளை இயன்றளவு அதன் பயன்பாட்டு ஆயுளையும் உயர்த்துவதன் மூலம் புதிதாக வெட்டுவதையும் குறைப்போம்.

தற்போதுள்ள மரநடுகைக் காலத்தைப்பயன்படுத்தி ஏராளமான மரங்களை நட்டுப் பராமரிப்போம்.

எம் மண்ணை நேசிப்போம் எம் வளமான வனத்தை நேசிப்போம். அதன் மூலம் எமது வருங்கால சந்ததியினரின் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்.

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

## பிரிகேடியர் வீரசேகரவின் பொறுப்புகள் பறிப்பு

(கொழும்பு)

யுத்தக்கைதிகள் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவென முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவின் பொறுப்புகள் பறிக்கப்பட்டு இப்பொழுது அவர் பொறுப்பு எதுவுமற்ற அதிகாரியாகவே இருந்துவருவதாக தெரியவருகிறது.

லெப்.ஜெனரல் சிசில் வைத்தியரத்தின பதவிக்கு வந்ததும் இவரது பொறுப்புகள் பறிக்கப்பட்டு பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தநெருக்கடிகளால் விரக்தியடைந்துள்ள அவர் பதவியிருந்து ஒய்வுபெற ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகிறது

### பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

நல்லூர் வடக்கு கல்வியன்காடு இலங்கைநாயகிசனசமூக நிலையத்தின் கைப்பணிச் சபையின் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிலையத் தலைவர் ஆ. க. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற எளிமையான வைபவமொன்றில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டதிருமதி ஜெகநாதன் நிலையத்தை திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார்.

மட்பாண்டத் தொழிற்சாலை

## 'மக்கள் மயம்' போர்வையில்

## காஷ்மீரில் வெளியார் குறுக்கீடு இந்தியா பொறுத்துக் கொள்ளாது

### - வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங்

[டில்லி]

ஜம்மு காஷ்மீரில் வெளியார் குறுக்கீடு எதையும் இந்தியா பொறுத்துக் கொள்ளாது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் கூறியுள்ளார். காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா இப்பொழுது கருத்து வெளியிட்டிருப்பது ஆச்சரியம் அளிப்பதாக இருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஹஸ்ரத்பால் வழிபாட்டுத் தலத்தினுள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்போரை தீவிரவாதிகள் விடுவிக்க இருக்கும். இத் தருணத்தில் அமெரிக்க அரசு இவ்வாறான கருத்தை வெளியிட்டிருப்பது பெரும் வேதனை தருவதாகவும் அவர்குறிப்பிட்டார்.

இத்தகைய அறிக்கைகள்காஷ்மீரில் மட்டுமன்றி மற்றைய இடங்களிலும் பகைமையை வளர்க்கவே உதவும் என்றும் அமைச்சர் தினேஷ் சிங் குறிப்பிட்டுக் கூறினார்.

அத்துடன் காஷ்மீர் அந்தஸ்துக் குறித்து அமெரிக்கா எழுப்பியுள்ள அச்சத்தினால் இந்திய மக்களின் மனம் மிகவும் கவலையடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

### பாதுகாப்பு நடவடிக்கை

[சென்னை]

அண்மையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உபஜனாதிபதி நாராயணனைபார்ப்பதற்காக வந்த பிரதமர் பி.வி. நரசிம்மராவிற்கு மாலை அணிய வேண்டாம். சால்வை போர்த்த வேண்டாம், பூச்செண்டு வழங்க வேண்டாம் என்று சென்னை விமான நிலையத்தில்

## அணுசக்தி திராவகக் கழிவுகளை கடலில் கொட்டவேண்டாம்

### ரஷ்யாவுக்கு ஜப்பான் எச்சரிக்கை

புக்களை உலகில், ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி விரைவு படுத்தியது. அதிலும், கடந்த முப்பது வருட காலத்திற்குள் மனிதன் பூமியை பேரழிவின் விளிம்பிற்கே கொண்டு சென்றுவிட்டான் என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந் நிலையில், பூமியில் மனிதன் தொடர்ந்தும் உயிர் வாழ வேண்டுமோனால் பூமியின் இயற்கைச் சமநிலையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். உலக அழிவிற்கான போராயுதங்களைச் செய்து குவித்ததில் மேற்குலகிற்கு உள்ள பங்கைப் போன்றே சூழல் மாசடைவதற்கான பெரும் பங்கும் அவர்களுக்கே உரியதாகும். ஆனால், எமது பங்கிற்கு நாமும் இயற்கைச் சமநிலையைப் பாதிப்படையச் செய்யாமல் இல்லை. இதில் முக்கியமாக காடழிப்பு எமது இயற்கைச் சமநிலையைப் பெரிதும பாதிப்படையச் செய்கின்றது.

யாழ். குடாநாடு ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்தளவு மழைவீழ்ச்சியோ அன்றி பெரும் காட்டு வளமோ கொண்ட பகுதி அல்ல. பொதுவாக நீண்ட வரண்ட கோடையைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு சுமார் மூன்று மாத காலங்களில் 50 அங்குலத்திற்கும் (1250 மி.மீ) 60 அங்குலத்திற்கும் (1500 மி.மீ ) இடைப்பட்ட மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறுகின்றது. அத்தோடு யாழ் குடாநாட்டின் இயற்கைத் தாவரங்களும் பரட்டைக் காடுகள், சிறுகாடுகள்என்ற ரீதியிலேயே உள்ளன. ஒப்பீட்டளவில் பெரும் காடுவளம் குடாநாட்டில் இல்லை என்றே கூறலாம்.

இந்நிலையில், யாழ் குடாநாட்டில் காடுகளை மனிதனின் தேவைக்காக அழித்தலென்பது இயற்கைச் சமநிலையைப் பெரிதாகப் பாதிப்படையச் செய்யும் என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமில்லை. அதிலும், தற்பொழுது யாழ். குடாநாட்டிற்குத் தேவையான விறகுத் தேவையின் பெரும் பகுதியை இச்சிறு காடுகளில் இருந்து பெற்றுக் கொள்ள முற்படுதல் என்பது இயற்கைக்கு முற்றாக நாசம் விளைவிக்கும் செயலாகவே அமையும்.

இவ்வாறு இயற்கைக்கு நாசம் விளைவிக்கப்படும் பட்சத்தில் மழை வீழ்ச்சியில் பெரும் குறைவு ஏற்பட்டு ஏற்கனவே வரண்ட பூமியான யாழ் குடாநாடு மேலும் வரட்சியடையும் வாய்ப்பு அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. உலகிலேயே அதிக மழை வீழ்ச்சியைப் பதிவு செய்தஇடமான இந்தியாவிலுள்ள சிராப்பூஞ்சிப் பகுதியில் திட்டமிடாபெரும் காடழிப்பு நடவடிக்கையால்மழைவீழ்ச்சியில் பெரும் குறைவு ஏற்பட்டுள்ளமை இதற்குச் சிறப்பான உதாரணமாகும்.

இந் நிலையில், சூழலைப் பாதுகாக்கவும், இயற்கையைப் பேணுவதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியமானதாகும். இது எஞ்சியுள்ள வளங்களைப் பேணுவதன் மூலம் இயற்கைச் சமநிலையைப் பாதுகாக்கவும், புதிதாக உருவாக்குவதன் மூலம் இழந்த வளங்களை மீளப்பெறுவதும் தேவைகளை ஈடு செய்யவும் மிக மிக அவசியமாகின்றது. இந்த விடயத்தில் காலதாமதம் ஏற்பட்டு விட்டதாயினும், விரைந்து செயற்படுவதன் மூலம் ஓரளவேனும் நிலைமையைச் சமாளிக்க முயற்சிக்கலாம்.

இதன் அடிப்படையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்த ஒரு வார காலத்தை மர நடுகை வாரமாக பிரகடனப்படுத்தி அதனைச் செயல் முறைப்படுத்தியமை வரவேற்கத்தக்கது. இதேவேளை இந்நடவடிக்கை ஒரு அமைப்பினால் ஒரு வார காலத்திலோ அன்றி ஒரு மாத காலத்திற்குள்ளேயோ செயல்முறைப்படுத்தக் கூடிய திட்டம் அல்ல. ஆகையால் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் போன்ற அமைப்புகள் இதற்கான ஊக்கத்தைக் கொடுக்க முடியுமே ஒழிய மக்களே இதில் பூரண கவனம் செலுத்த வேண்டும். அதாவது இயற்கையின் கொடைகள் தற்போதைய மனிதன் அனுபவிப்பதற்கு மட்டுமானவையல்ல எதிர்கால சந்ததிகளின் வாழ்விற்கும் அவசியமானவை என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

---

களுடன் பேச்சுவார்த்தை நடாத்தவென முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவின் பொறுப்புகள் பறிக்கப்பட்டு இப்பொழுது அவர் பொறுப்பு எதுவுமற்ற அதிகாரியாகவே இருந்துவருவதாக தெரியவருகிறது.

லெப்.ஜெனரல் சிசில் வைத்தியரத்தின பதவிக்கு வந்ததும் இவரது பொறுப்புகள் பறிக்கப்பட்டு பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தநெருக்கடிகளால் விரக்தியடைந்துள்ள அவர் பதவி

## பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

நல்லூர் வடக்கு கல்வியன்காடு இலங்கைநாயகிசனசமூக நிலையத்தின் கைப்பணிச் சபையின் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிலையத் தலைவர் ஆ. க. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற எளிமையான வைபவமொன்றில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டதிருமதி ஜெகநாதன் நிலையத்தை திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார்.

---

மட்பாண்டத் தொழிற்சாலை

# 'மக்கள் மயம்' போர்வையில் அமைச்சர் கொள்வனவு

(கொழும்பு)

1987 ஆம்ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசாங்க திணைக்களங்களை மக்கள் மயப்படுத்தும் சட்டத்தின் கீழ் அரசாங்க மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின்கீழ்'இயங்கும் ஏழு மட்பாண்ட தொழிற்சாலைகள் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளன. இத் தொழிற்சாலைகள் அமைச்சர் உட்பட இராஜாங்க அமைச்சர் மற்றும் ஜாதிக சேவைகள் சங்கத்தின் செயலாளர் ஆகியோருக்கு விற்பனைசெய்ய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக சுதந்திர தொழில் சேவைகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# இனவாதத்தை தூண்டிவிட சு.கவினுள் சிலர் முயற்சி

– சிறிமாவோ எச்சரிக்கை

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிக்குள் இனவாதத்தை தூண்டி வளர்க்க சிலர் முயன்று வருகின்றனர் அதற்கு எவரும் இடமளிக்கக் கூடாது. என்று எதிர்க்கட்சித் தலைவியும், சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அநுரா இதற்கு முன்பும் கட்சியிலிருந்து [illegible] கிறார் மீண்டும் கட்சியில் வந்து சேர்ந்தார் அதே போன்று மற்றும் சிலரும் கட்சியிலிருந்து விலகிச் சென்று மீண்டும் வந்து சேர்ந்திருக்கின்றனர். அதே போன்று அநுராவும் தனது பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டு கட்சியில் வந்து சேர்ந்து கொள்ளலாம் அநுராவை ஐ.தே.க அழைத்திருப்பது அநுராவின் மீது ஏற்பட்டுள்ள அனுதாபத்தால் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

# திணைக்கள வாகனத்தை விற்றனர் பொலிஸ் அதிகாரிகள்

## சோதனையில் கண்டுபிடிப்பு

சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனம் ஒன்று இலக்கத் தகடு மாற்றப்பட்டு கைமாற்றப்பட்டுள்ளது.

இந்த வாகன மோசடியில் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கோஷ்டி ஒன்றே இந்த வாகன மோசடியைக்கண்டுபிடித்தது.

பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் இணைந்தே இந்த மோசடியில் ஈடுபட்டிருந்தமை தற்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

---

வீட்டிலே தோட்டம் செய்தால்
நாட்டிலே பசி தீரும்

---

- வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங்

[டில்லி]

ஜம்மு காஷ்மீரில் வெளியார் குறுக்கீடு எதையும் இந்தியா பொறுத்துக் கொள்ளாது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் கூறியுள்ளார். காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா இப்பொழுது கருத்து வெளியிட்டிருப்பது ஆச்சரியம் அளிப்பதாக இருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஹஸ்ரத்பால் வழிபாட்டுத் தலத்தினுள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்போரை தீவிரவாதிகள் விடுவிக்க இருக்கும் இத் தருணத்தில் அமெரிக்க அரசு இவ்வாறான கருத்தை வெளியிட்டிருப்பது பெரும் வேதனை தருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய அறிக்கைகள்காஷ்மீரில் மட்டுமன்றி மற்றைய இடங்களிலும் பகைமையை வளர்க்கவே உதவும் என்றும் அமைச்சர் தினேஷ் சிங் குறிப்பிட்டுக் கூறினார்.

அத்துடன் காஷ்மீர் அந்தஸ்துக் குறித்து அமெரிக்கா எழுப்பியுள்ள அச்சத்தினால் இந்திய மக்களின் மனம் மிகவும் கவலையடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாதுகாப்பு நடவடிக்கை

[சென்னை]

அண்மையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உபஜனாதிபதி நாராயணனைபார்ப்பதற்காக வந்த பிரதமர் பி.வி. நரசிம்மராவிற்கு மாலை அணிய வேண்டாம். சால்வை போர்த்த வேண்டாம், பூச்செண்டு வழங்க வேண்டாம் என்று சென்னை விமான நிலையத்தில் பலமுறை பகிரங்க அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அத்தோடு பிரதமரை வரவேற்கஆளுநர்,முதலமைச்சர், ஐ ஜீ.பி ஆகியோர் மட்டுமே விமானத்திற்கு அண்மையில் செல்லஅனுமதிக்கப்பட்டனர். மற்றவர்கள்செல்லவேண்டாம் என்று தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அங்கு கூடியிருந்த காங்கிரஸ்காரர் இந்தவேண்டுகோள்களை புறக்கணித்து விட்டு பிரதமரை வரவேற்க விமான ஓடு பாதைக்கே சென்றுவிட்டனர். அத்தோடு பிரதமருக்கு மாலை அணிவித்தனர். சால்வைபோர்த்தினர்.

திரு. பாலசுப்பிரமணியம், வாழப்பாடிராமமூர்த்தி, திரு. குமரியனந்தன் மற்றும் சில காங்கிரஸ்காரர்களே இந்த வேண்டுகோள்களை புறக்கணித்தவர்களாவர்.

# அணுசக்தி திராவகக் கழிவுகளை கடலில் கொட்டவேண்டாம்

## ரஷ்யாவுக்கு ஜப்பான் எச்சரிக்கை

அணுசக்தி கழிவுப்பொருட்களை கப்பலில் ஏற்றிவந்து ஜப்பானியக்கடலில் கொட்டும் ரஷ்ய அரசின் செய்கை குறித்து ஜப்பான் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

கதிரியக்கத் தன்மை கொண்ட இவ் அணுசக்திக் கழிவுகளால் ஜப்பான் பாதிக்கப்படலாம் என்றும் ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் ஸுடோ முஹடா ரஷ்ய வெளிநாட்டமைச்சர் கொள்ரேவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

32,000 கனஅடி அணுசக்தி திராவகக் கழிவை ஜப்பானியக்கடலில் புதைக்கும் திட்டத்தை கைவிடுமாறும் ஜப்பான் ரஷ்யாவைக் கோரியுள்ளது.

கழிவுகள் ஜப்பானியக் கடலில் போடப்பட்டால் இரு நாட்டு உறவுகளும் பாதிக்கப்படும் என்று ஜப்பானிய அமைச்சர் எச்சரிக்கை செய்துள்ள அதே சமயம் தங்களுக்கு இக் கழிவுகளைப் பாதுகாப்பான பகுதியில் போடும் வசதிகள் இல்லையென்றும் இத்தகைய வசதிகளை அமைக்க ஜப்பான் உதவினால் நன்றி தெரிவிப்பதாகவும் கழிவுப் பொருள் ஏற்றி வந்த கப்பலின் கப்டன் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆண்டுதோறும் 70, 6000 கன அடி அணுசக்தி கழிவுப் பொருட்களை பழைய கப்பல்களில் சேகரித்து வைப்பதாக ரஷ்ய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# சோமாலியாவில் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கலாம்

## ஐ. நா. செயலாளர் அச்சம்

(வாஷிங்டன்)

சோமாலியில் சண்டையிடும் தரப்பினரிடமிருந்து ஆயுதங்களைக் களையாமல் அமெரிக்க இராணுவம் வெளியேறினால் முயற்சி தோல்வியில் முடியும் என்று ஐ. நா. சபைச் செயலாளர் பூட்டர்ஸ் காலி அச்சம் தெரிவித்துள்ளார்.

யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கும் அறிகுறிகள் இருப்பதாக அவர் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, அடுத்த வருடம் மார்ச் மாதம் தான் அமெரிக்கப் படைகளைத் திருப்பி அழைக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் கூறினார்.

## சுய தொழில் ஊக்குவிப்பு

இராணுவ நடவடிக்கைகளினால்கடலிற்காணாமற்போன பிரதான உழைப்பாளியை இழந்த வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த 26 குடும்பங்களிற்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டது. புனர்வாழ்வு திட்டத்தை ஆதிசக்தி சிக்கனக் கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினர் கனடாவில் இயங்கும் வல்வை நலன்புரிச் சங்கத்தின் நிதி உதவியுடன் அண்மையில் ஆரம்பித்து வைத்தனர். இத்திட்டத்தில் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 3000 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் போரூட் சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் திரு. என். கோகிலதாஸ் பிரதம விருந்தினராயும், வடமராட்சி வடக்கு கடற்புலிகள் அரசியற் பொறுப்பாளர் இ. சங்கீதன் சிறப்பு விருந்தினராயும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நேட்டோவுடன் இணைந்து இராணுவ ஒத்திகை?

புடாபெஸ்ட்))

நெருங்கிய இராணுவ ஒத்துழைப்பை முன்னிட்டு அமெரிக்கா வகுத்துள்ள திட்டம் ஒன்றின் அடிப்படையில், அடுத்த ஆண்டில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் இராணுவப் படைகள் நேட்டோ படைகளுடன் கூட்டான இராணுவ ஒத்திகைகளில் ஈடுபடக் கூடும் என்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட இராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

இக் கூட்டு ஒத்திகை இறுதியில் சமாதான நெருக்கடி நிர்வாகத்திற்கும் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கும் உதவுவதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இத்தகைய சமாதானப் பங்கின்மூலம் முன்னாள் வார்ஸா படைகளையும் நேட்டோ கூட்டமைப்புடன் கொண்டு வரமுடியும் என்றும் கருதப் படுகிறது.

# 'நாளை' கவிதை நூல் புதனன்று வெளியீடு

கவிஞர் நிலா தமிழின் தாசனின் ''நாளை'' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் மூன்றாம் திகதி புதன் கிழமை மாலை 4.00மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ந. திலீபன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி சி. அன்பரசு, யாழ். மாவட்ட தளபதி வ அன்பு ஆகியோர் மங்கள விளக்கேற்றுவர். புனர்வாழ்வுப் பிரிவு பொறுப்பாளர் சி. ரவி வரவேற்புரையையும் கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டு உரையையும் நிகழ்த்துவர். முதற் பிரதியை அரசியல் துறைப் பொறுப்பாளர் ப. தமிழ்ச்செல்வன் வழங்க கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ இளங்குமரன் பெற்றுக் கொள்வார்.

சிறப்புரையை கவிஞர் இ முருகையனும் மதிப்புரைகளை கவிஞர் சோ. பத்மநாதன், பேராசிரியர் அ சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்துவர். ஆசிரியருரையை நிலா தமிழின் தாசன் நிகழ்த்துவார்.

## யாழ் பாடசாலைகள்; உதைபந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகள் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் (15வயது பிரிவு) கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்றுமாலைபி.ப. 3மணிக்கு பின்வரும் போட்டிகள் நடைபெறும்

யாழ் இந்துக்கல்லூரி எதிர் புனிதகென்றிஅரசர், யாழ்புனிதஜோசப் ம வி எதிர் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. மேலும் நெல்லியடி ம ம.வி. மைதானம், யாழ் இந்துக்கல்லூரி மைதானம், மட்டுவில் ம. வி மைதானம் ஆகியவற்றில் முன்னர் அறிவிக்கப்பட்டபடி போட்டிகள் நடைபெறும்.

## மங்கள இசைப் போட்டி; கலைஞர் மோதலில் முடிவு

திருமண வைபவமொன்றில் மங்கள வாத்தியம் வாசிப்பதில் இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட பூசல் அடி தடிவரை சென்றது. அண்மையில் நீர்வேலிப் பகுதியில் இடம்பெற்ற திருமண வைபவம் ஒன்றில் மங்கள வாத்தியம் வாசிக்க இரு தரப்பினராலும் அழைக்கப்பட்டிருந்த வெவ்வேறு குழுவினர்களுக்கிடையே மங்கள வாத்தியம் இசைப்பதில் எழுந்த போட்டியை கூடியிருந்தவர்கள் வெகுவாக ரசித்தனராம்.

இவ் வைபவத்தை தொடர்ந்து மங்கள வாத்தியக் குழுவினர் வீடு திரும்புகையில் கைதடியில் வழி மறித்த மற்றக் குழுவினர் கத்திகள், பொல்லுகள், தடிகள் என்பனவற்றால் கடுமையாகத் தாக்கினார்கள். எதிர் பாராத திடீர்த்தாக்குதலால் இக் குழுவினர் நிலை குலைந்தனர் இச் சம்பவத்தின் போது கைதடியைச் சேர்ந்த எஸ். கோபாலகிருஷ்ணன் (வயது 39) என்னும் வாத்தியக் கலைஞர் படுகாயமுற்று சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். சாவகச்சேரி காவல் பணிமனையினர் இச் சம்பவம் பற்றிய மேல் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். (86)

## கலாநிதி பட்டம்

யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கா. குகபாலன் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார், கலாநிதிப் பட்டத்துக்கு அவர் யாழ். மாவட்டத்தில் உள் - வெளி இடம்பெயர்வு பற்றிய ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்திருந்தார்.

இருபது வருட காலமாக இவர் புவியியல் விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார். முதலில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் விரிவுரையாளராகக் கடமையாற்றிய குகபாலன் தற்போது யாழ் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி வருகிறார்.

## சந்திப்பு

சங்கீத, நடன ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும் எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை மு ப 9மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்திற்கு தவறாது வருகை தரும்படி சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு கணபதிப்பிள்ளை கேட்டுள்ளார்.

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் குளப்பிட்டிச் சந்தியில் T என்ற ஆங்கில எழுத்து பொறிக்கப்பட்ட வீட்டுச் சாவியொன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்

## கலந்துரையாடல்

ஆங்கில உதவி ஆசிரியர் பயிற்சிக்காக நீர்கொழும்புக்கும் வவுனியாவிற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகலரும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## நிவாரணம்

அனைத்தையும் மூடி ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

இதே வேளை கடந்த வெள்ளிக்கிழமை மடு முகாமிற்கு உலர் உணவு ஏற்றி வந்த அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலய வாகனங்களை சுற்றி வளைத்த மக்கள் அவற்றை திரும்பி செல்ல விடாது தடுத்து வைத்ததுடன் தமக்கு அரசு உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் வழங்கும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் தமது இக் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை எந்தவொரு அரச சார்

## புலிகள்

ணுவம் தீ வைத்து எரித்திருந்தது. தென்னை மரங்களில் இளநீர் வெட்டிக் குடித்து விட்டு பெருமளவு கோம்பைகள் குவிக்கப்பட்டிருந்தன. அரிசி ஆலையொன்று தீயிடப்பட்டிருந்தது. லொறி ஒன்றும் தீயிடப்பட்டிருந்தது பல படகுகள் கடற்பரப்பில் வைத்து எரிக்கப்பட்டிருந்தன. பொதுமக்கள் சிலர் தமது எரிந்த உடைமைகளைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தனர்.

அங்குள்ள மக்கள் யாரும் இராணுவத்தினர் தம்மை மீட்க வந்தவர்கள் என எண்ணவில்லை அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்பவர்களாகவே இருக்கிறார்கள். வானத்தில் விமானங்கள் வரும் போது புலிகளின் வாகனங்களை மறித்து எச்சரிக்கை செய்கிறார்கள். இராணுவம் அங்கு வருவதையோ அல்லது இந்த அரசாங்கத்தின் ஆட்சி நடைபெறுவதையோ அவர்கள் விரும்பவில்லை தாம் உரிமைபெற்று கௌரவமாக வாழவே விரும்புகின்றனர்.

நாம் அங்கு தங்கியிருந்த போது பல சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தோம் அப்போ அவர்கள் ''நாம் சமாதானமாக இருக்க வேண்டும். எம்மை மனிதர்களென ஏற்று உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் நாம் உங்களுடன் ஒன்றுபட்டு வாழமுடியும் எனத் தெரிவித்தனர்.

கடந்தகாலங்களில் எங்களை போல சமாதானமாக வாழ்ந்தவர்கள் உலகில் எங்கும் இருக்க முடியாது. ஆனால் எமக்கு ஏற்பட்ட பாதிப்புகளே எம்மை சினம்கொள்ள வைத்தன.

அரசின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் வட பகுதியை மட்டும் ஏற்க அவர்கள் தயாராகஇல்லை. தமக்கு உரிமையுடைய வடக்கு கிழக்கு பிரதேசத்தையே காண விரும்புகிறார்கள் என்றார்.

## பல்கலை

ரங்களை அடிப்படையாக வைத்து மாணவர்களின் அனுமதி முறைதறித்து வடபகுதி மாணவர்கள் கொண்டிருக்கும் அதிருப்தி உணர்வுகள் குறித்து எடுத்துக் கூறினர். எனினும் திரு. பிரட்மன் வீரக்கோன் இவ்விடயம்தொடர்பாகதிருப்திகரமான பதில் எதுவும் கூறவில்லையென்று கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

இவற்றைவிட மேற்படி குவேக்கர்ஸ் சமாதானக் குழுவினர் கொழும்பில் உள்ள பல்வேறு வெளிநாட்டுத் தூதாக அதிகாரிகளுடனும் இவ்வெட்டுப் புள்ளிததிட்டத்தினால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து எடுத்து விளக்கி வருகின்றனர் என்றும் மேற்படி கொழும்பில் இருந்து கிடைத்த தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கைதானவர்கா

திருமலை மேல்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆனால் சந்தேக நபர்களை அழைத்து செல்வதில் சம்பந்தப்பட்ட வழக்கிற் ஆஜராகும் வவுனியா உய பொலிஸ் அதிகாரிகள் தமக் போக்குவரத்தின் போது போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரியுள்ளதாகவும் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது

## இலங்கையர்

இதற்கான சட்டம் இன்று முதல் அமுலுக்கு வருகிறது

புகலிடம் கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு தவிர்க்கமுடியாத காரணம் ஏதாவது இருந்தால், அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கும் ஒரு வருட காலத்துக்கு மாத்திரம் பண உதவி வழங்கப்படவுள்ளது


## 3-ம் ஆண்டு நினைவலைகள்



ஈழமண்ணில் 25-10-1967

ஈழவிடுதலைக்காக 03-11-1990

### கப்டன் அருந்ததி

(சிவறஞ்சினி சண்முகநாதன்)

திதி: 01-11-1993 (துர்முகி - ஐப்பசி)

தமிழீழம் காண்பதற்காய் தம்மையே அர்ப்பணித்த
நமதன்பு அருந்ததியே நாயன்மார் கட்டினிலே
அமுதமே தமிழினிமை ஆற்றலுயர் நங்கை நீயே
நமதீழம் காண்பதன் முன் நடந்தாயே
என் செய்வோம்!

சண்முகநாதன் தவமுயர் செல்வி
சால்புயர் நாம சிவறஞ்சினியே!
ஒளிமுக முள்ளாய் உயர் நிறை வேங்கை
படைதனில் நிறைந்தாய் பரமனை அடைந்தாய்

மாண்புற்றாள் சிவறஞ்சினி அருந்ததியாக
மாவீராங்கனையாக எழுந்தே சென்றாள்.

சிவறஞ்சினி வீதி, நாயன்மார் கட்டு. யாழ்ப்பாணம்.

த. சண்முகநாதன் குடும்பத்தினர்
கா இரகுநாதன் குடும்பத்தினர்

(6449)



பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

**கல்வியாண்டு 1994/95**

பின்வரும் பாட நெறிக்கான விரிவுரைகள்

**5-12-1993-ல் ஆரம்பமாகின்றன**

- கலைமாணி B A.
- விஞ்ஞான மாணி B Sc (புள்ளிவிபரவியல்)

க. பொ. த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம் 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 2 12 1993

விண்ணப்பப்படிவத்தினையும் விபரத்திரட்டினையும் பெறவிரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ / தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப்பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே

(சி 7815)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 31.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11504

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
41-4129, 26 2668, 27 8751, 24 5964, 24-7941, 24 8364, 26 3294, 27-1292, 28 6546, 24 9773, 26-6320, 27-4630, 24-5137, 41 3460, 26 5113.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
24-5912, 26-4809, 41-9876, 24 4367, 27-4628, 28-9327, 22-1355, 22-6897, 42-1227, 24-5119, 24 6811, 26 0382, 24-3071, 41-9165.


தீபாவளி சிறப்புற நீங்கள் களிப்புற இன்றே வருக

நவநாகரீக பட்டை வகைகள்


## நினைவு கூருகின்றோம்

## அறிவுக் களஞ்சியம் - 17

திகதி: 01-11-1993 (துர்முகி - ஐப்பசி)

தமிழீழம் காண்பதற்காய் தம்மையே அர்ப்பணித்த
நமதன்பு அருந்ததியே நாயன்மார் கட்டினிலே
அமுதமே தமிழினிமை ஆற்றலுயர் நங்கை நீயே
நமதீழம் காண்பதன் முன் நடந்தாயே
என் செய்வோம்!

சண்முகநாதன் தவமுயர் செல்வி
சால்புயர் நாம சிவரஞ்சினியே!
ஒளமுக முளளாய் உயர் நிறை வேங்கை
படைதனில் நிறைந்தாய் பரமனை அடைந்தாய்


மாண்புற்றாள் சிவரஞ்சினி அருந்ததியாக
மாவீராங்கனையாக எழுந்தே சென்றாள்.

சிவரஞ்சினி வீதி,
நாயன்மார் கட்டு.
யாழ்ப்பாணம்.

**த. சண்முகநாதன் குடும்பத்தினர்**
**கா இரகுநாதன் குடும்பத்தினர்**

(6449)

# நினைவு கூருகின்றோம்



அமரர்

## திரு. கந்தையா பரமானந்தன்

(அதிபர் யா/ஸ்ரீலங்கா வித்தியாலயம் அல்வாய்)

| | | |
|---|---|---|
| அல்வாயூர் | முழுமைக்கும் | பரமானந்தன் |
| ஆசிரிடன | நலலதிபன | பரமானந்தன் |
| சொல்வாழ்வு | நற்கலைஞன் | பரமானந்தன் |
| சுந்தரமாா | நாடகஞ்மசய் | பரமானந்தன் |
| செல்வாக்கு | நல்முயர் | பரமானந்தன் |
| விளையாட்டில் | வீரனாம | பரமானந்தன் |
| எல்லோர்க்கும் | நல்லினியன் | பரமானந்தன் |
| இறையடியில | இப்பொழுதோ | பரமானந்தன் |

''உங்கள் நினைவில் எங்கள் அர்ப்பணிப்புகள்''

அல்வாய்.

நன்றியுடன்
மனைவி, மகள், குடும்பத்தினர்.

(6448)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம் 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க பொ. த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 2 12 1993**

விண்ணப்பப்படிவத்தினையும் விபரத்திரட்டினையும் பெறவிரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ / தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

*148/1, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வெளிவாரிப்பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே

(சி 7815)

# அறிவுக் களஞ்சியம் - 17

—— வெளிவந்து விட்டது! ——

சிறந்த அறிவியல் ஏடு விலை ரூபா 12/

(6423)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
20 — 11 — 1951



வீரச்சாவு:
18 — 09 — 1993

## மேஜர் மூர்த்தி மாஸ்டர்

சந்திரசேகரம் கிருஷ்ணமூர்த்தி

**(கடற்புலிகள் பொறியியல் பிரிவுப் பொறுப்பாளர்)**

அன்பாக எமை அணைத்து ஆதரவாய்
அருகிலிருத்தி அணைத்து மகிழும்
மாசில் லாமனமுடைய மாஸ்ரர்
மூர்த்தி அண்ணாவே
ஒன்றாக நாம் இருந்து ஓர் உறவாய்
வாழ்ந்ததெல்லாம் கனவாக கலைந்திடுமா
கற்பனையில் நிறைந்திடுமா
விடுதலைக்காய் கூவி நின்ற
விடியல்ப் பறவையே எம்
விழி இரண்டும் நீர் நிறைய உமை
விதி அணைத்து சென்றதுவோ.
நாட்கள் சில மறைந்தாலென்ன
நாம் உமை மறப்போமா? இல்லை. இல்லை.

என்றும் உங்கள் நினைவில் நிறையும்

நிசாந்தன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

பப்பாய் அண்ணா, அக்கா,
பிள்ளைகள்.

(6450)

[illegible] 11.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகலரும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## நிவாரணம்

அனைத்தையும் மூடி ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

இதே வேளை கடந்த வெள்ளிக்கிழமை மடு முகாமிற்கு உலர் உணவு ஏற்றி வந்த அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலய வாகனங்களை சூழ்ந்து வளைத்த மக்கள் அவற்றை திரும்பி செல்லவிடாது தடுத்து வைத்ததுடன் தமக்கு அரசு உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் வழங்கும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் தமது இக் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனங்களும் இயங்க முடியாது எனவும் எச்சரித்துள்ளனர்.

## ஆரையம்பதி

மட்டக்களப்பு காட்டுக் கந்தோர் கொலைக்களமாகவே இருக்கிறது. அங்கு சென்றவர் திரும்புவதில்லை. கண்கள் தோண்டப்படும் இடமாக முன்பு இது இருந்தது. இது பற்றி தமக்கு எந்த முறைப்பாடும் தனது அலுவலகத்திற்கு வரவில்லை என கருணாகரன் எம்.பி கூறுகிறார். அலுவலகத்தில் இவரே இருப்பதில்லை. இவரின் ரெலோ உறுப்பினரே இருப்பர். அந்தப் பக்கம் போவதற்கே பயம்.

களுவாஞ்சிக் குடியில் கருணாகரனின சொந்த தம்பி 'மாமா' என்ற பெயரில் இராணுவத்துடன் திரிகின்றார். செட்டிபாளையத்தில் ஒரு வீட்டில் இவரின்குழு கொள்ளையடித்ததாக பொலிசில் முறைப்பாடு செய்த இப்பகுதியை சேர்ந்த ஒருவரும் மற்றொருவரும் நடுவீதியில் வைத்து உலக்கையால் அடித்து கொல்லப்பட்டனர் இதனை கருணாகரனின் தம்பயான மாமா என்பவரே செய்தார். செங்கலடியில் இராணுவத்துக்கு ரெலோ குழுவினர் பெண்களை பிடித்து கொடுக்கின்றனர்.

மட்டக்களப்பு எம். பியான இவர் கூறிய பொய்களை மட்டக்களப்பு மக்கள் எப்படி ஜீரணிப்பார்கள். தன் இனத்தையே மாசுபடுத்தும் இவர்கள் எல்லாம் எப்படி மனிதர்களாக இருக்க முடியும் என்று கேள்வியும் எழுகிறது. எமது ஊரைப் பொறுத்தவரையில் ஆமியில் இருந்து அதிரடிப் படைவரை எல்லாவகைபடைகளுட னும்சேர்ந்திருப்பவர்கள் ரெலோக்காரர்கள் மட்டுமே.

கருணாகரனின் பொய் அறிக்கையை வெளிச்சத்திற்கு கொண்டுவர இக் கடிதத்தை பத்திரிகையில் பிரசுரிக்கும் படி கேட்கிறேன்' என அவர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

[illegible] வடக்கு கிழக்கு பிரதேசத்தையே காண விரும்புகிறார்கள் என்றார்.

இருக்கும் ஒரு வருட காலத்துக்கு மாத்திரம் பண உதவி வழங்கப்படவுள்ளது

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

# 31.10.93

**எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11504**

**வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:**
41-4129, 26 2668, 27 8751, 24 5964, 24-7941, 24 8364, 26 3294, 27-1292, 28 6546, 24 9773, 26-6320, 27-4630, 24-5137, 41 3460, 26 5113.

**வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:**
24-5912, 26-4809, 41-9876, 24 4367, 27-4628, 28-9327, 22-1355, 22-6897, 42-1227, 24-5119, 24 6811, 26 0382, 24-3071, 41-9165.

**தீபாவளி சிறப்புற நீங்கள் களிப்புற இன்றே வருக**

- நவநாகரீக புடவை வகைகள்
- தரமிகு தையல் சேவை !!
- சமையற் பொருட்கள்
- பால்மா வகைகள்
- விளையாட்டுப் பொருட்கள்
- புத்தகவகைகள்
- பாத்திர வகைகள்
- மின் உபகரணங்கள்
- அழகியற் சாதனங்கள்

**குறைந்த விலையில்:**

பீங்கான் வகைகள் - சுவர் கடிகாரங்கள் - புடவை வகைகள்

**மாதாந்த பரிசுத் திட்டம்:**

**ரூ. 2500/- ரூ. 1500\- ரூ. 1000\-**

**ரூ.500\-ற்கு மேல் கொள்வனவு செய்து பங்குபற்றுங்கள்,**

அன்பளிப்புகளிற்கு - அன்பளிப்பு மடல்கள்

**வழங்குநருக்கும் பெறுநருக்கும் இலவச பரிசு சிட்டைகள்**

# ★ எழிலகம் ★

**மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:- ஒக்ரோபர் மாதத்திற்கான மாதாந்த சீட்டிழுப்பு 2-11-93 செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணியளவில் இடம்பெறும்.

(சி-7816)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா நமசிவாயம்

ந. கிருஷ்ணசிங்கத்தின் தாயார் திருமதி பொன்னம்மா நமசிவாயம் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 1-11-1993 திங்கட்கிழமை பி. ப. 4 00 மணிக்கு நடைபெற்று அரியாலை சித்துபாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. கிருஷ்ணசிங்கம்

29/4, புகையிரத நிலைய முன்வீதி,
புங்கங்குளம், அரியாலை,
யாழ்ப்பாணம்:

(6451)